# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## தமிழ் இலக்கிய நயம் / දෙමළ සාහිත්‍ය - T 48

சுட்டெண்:................................... தரம் : **10** நேரம்: 3 மணித்தியாலம்

♦ பகுதி I இல் 1,2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும் பகுதி III இல் 4,5,6,7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

i. ‘மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பழந்தான்”

அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது விளக்குக.

ஆ) இவ்வரிகளில் வெளிப்படும் கவிஞனின் கவியாற்றலை விளக்குக.

ii. “ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கி தார்குலாம் அலங்கல் மார்பன் தாயாரை நினைத்து நைந்தான்”

அ) “இங்கு ஏர்குலாம் முகத்தினாள்” யார்?

ஆ) “அலங்கல் மார்பன்” யார்?

iii. “என்ன செய்யறதுன்னு தான் எனக்கும் புரியலே ஒரு நாளைக்கு இதுவே ஒரு படி பாலைக் குடிச்சிடும் போலே இருக்கு”

அ) இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?

ஆ) இது எச்சிறுகதையில் இடம் பெற்றுள்ளது?

iv. “குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ”

அ) குஞ்சியாச்சி

ஆ) குஞ்சியப்பு

என்பவற்றுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் வேறு உறவு முறைப் பெயர்கள் ஒவ்வொன்று தருக.

v. பொருநராற்றுப் படை என்ற

அ) இலக்கியத்தை எழுதியவர் யார்?

ஆ) இது எக்காலத்திற்குரியது? (4 x 5 = 20 புள்ளிகள்)

2. கீழ்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்*
*குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்*
*நான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவன் உண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே*

i. இப்பாடலைப் பாடியவர் யார்? இது யாரின் கூற்றாக இடம் பெற்றுள்ளது?
ii. இப்பாடலின் மையக் கருத்து யாது?
iii. தலைவி தலைவனிடத்தில் கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
iv. இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு விளக்குக.
v. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
அ) முளிதயிர் ஆ) கலிங்கம் இ) பாகர்
ஈ) குய்ப்புகை உ) ஒண்ணுதல்

(5 x 5 = 25 புள்ளிகள்)

## பகுதி II

3. கீழ்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காளைக் கன்றுக்குட்டிக்குக் கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை.

பால் குடிக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக் குட்டியை அவிழ்த்து விடும் மாடசாமி, சரியாகப் பால் சுரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில், அதை இழுத்துப் பிடித்துக் கட்டி விட்டு, கறக்க தொடங்கி விடுவான். அவன் சுறந்து முடித்து விட்டு, அவிழ்த்து விடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

கன்று குட்டி முட்டிப் பார்க்கும், மோதிப் பார்க்கும் கதறிப் பார்க்கும் இந்த துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித்தொண்டையிலிருந்து குரல் எழுப்பும், குறுக்கே நிற்கும். சுவரில் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப் பசுவுக்கோ இந்த வேதனைகளைத் தாங்கவே முடியவில்லை. அதனால் என்ன செய்ய முடியும்? கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ளவும் ?முடியவில்லை. குதிக்கவும் முடியவில்லை. தள தளவென்று சதைப்பிடிப்போடு, இருக்க வேண்டிய மேனியில் எழும்பும் கூட புறப்பட தொடங்கியது.

i. இங்கு கன்றுக்குட்டியின் பரிதாப நிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
ii. கன்றுக்குட்டிக்கு பால் குடிக்க முடியாமல் போனதற்கு காரணம் யாது?
iii. “இந்த துடிப்பை காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையில் இருந்து குரல் எழுப்பும்” இக்கூற்றின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? விளக்குக.
iv. இவ்வுரைப்பகுதியில் ஜீவகாருண்யத்தின் தேவை வலியுறுத்தப்படும் விதத்தினை விளக்குக.
v. இவ்வுரைப்பகுதியில் ஆசிரியரின் மொழிநடை சிறப்பு பற்றி விளக்குக.

(5 x 5 = 25 புள்ளிகள்)

## பகுதி III

4. “அமுதம்” என்ற கவிதையில்,
   i. மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறு எல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?
   ii. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணிகளை எடுத்துக் காட்டி, விளக்குக.

(8 + 7 = 15 புள்ளிகள்)

5. கிட்கிந்தைப் படலத்தில்,
   i. இராமன் இலக்குணனிடம் சுக்ரீவன் குறித்து ஆவேசப்பட்டு முறையிடுவற்றை எழுதுக.
   ii. இலக்குமணனின் சிறப்புக்களாக இங்கு கூறப்படுபவை யாவை?

(8 + 7 = 15 புள்ளிகள்)

6. “மரம் என்பது உயர்திணை” என்ற பத்தி எழுத்தில்
   i. மரத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?
   ii. ஆசிரியர் தனது கருத்துக்களை முன் வைப்பதற்கு கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டி, விளக்குக.

(8 + 7 = 15 புள்ளிகள்)

7. வாய்மொழிப் பாடலான மருத்துவிச்சிப் பாடலில் கிராமிய மண்வாசனை வெளிப்படுத்தப் படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)